# ஓவியம் மற்றும் சுடுமண் சிற்ப முகாம் - 2023 விதிமுறைகள்

1. ஓவியம் மற்றும் சுடுமண் சிற்ப முகாமில் பங்கேற்கும் கலைஞர்கள் முதியோர், இளையோர் என இரு பிரிவுகளாக அனுமதிக்கப்படுவார்கள்.
   - இளநிலை வயது 20 முதல் 35 வயதுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
   - முதுநிலை பிரிவில் 35 வயதுக்கு மேற்பட்டோர்.
2. ஓவிய முகாமிற்கு 50 ஓவியர்கள் மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள்.
   - இளநிலை 20 நபர்கள்
   - முதுநிலை 30 நபர்கள்
3. சுடுமண் சிற்ப முகாமிற்கு 50 கலைஞர்கள் மட்டுமே தேர்வு செய்யப்படுவார்கள்.
   - இளநிலை 20 நபர்கள்
   - முதுநிலை 30 நபர்கள்
4. தேர்வு குழுவினரே பங்கேற்பாளர்களை அவர்களின் அனுபவம் / கண்காட்சியில் பங்கேற்றமை/ ஓவிய (அ) சுடுமண் சிற்ப கலை முன்னேற்றத்திற்கு அவர்கள் ஆற்றிய பங்கு முதலியவைகளை கருத்தில் கொண்டு தேர்வு செய்யப்படுவர்.
5. **ஓவியர்கள்/ சிற்பிகள் தங்களது விண்ணபத்துடன் சமீப காலத்தில் வரைந்த ஓவியங்கள் / சுடுமண் சிற்பங்கள் மூன்றிலிருந்து ஐந்திற்குள்ளாக இணைக்கவேண்டும்.**
6. ஓவியர்களுக்கு ஓவியம் வரைவதற்கான கேன்வாஸ் முதுநிலை (3ft x 3ft), இளநிலை (3ft x 2ft), வண்ணம் (சிறியது) தூரிகை, குவளை, துணி மட்டுமே வழங்கப்படும். பிற பொருட்களை ஓவியர்களே எடுத்து வரவேண்டும்.
7. சுடுமண் சிற்ப முகாமில் பங்கேற்கும் கலைஞர்களுக்கு களிமண், வாளி, துண்டு துணை கருவிகள் மட்டுமே வழங்கப்படும். பிற பொருட்களை கலைஞர்களே எடுத்து வரவேண்டும்.
8. கலை அனுபவம் மிக்க ஓவியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
9. ஓவியம் மற்றும் சுடுமண் சிற்ப முகாமில் பங்கேற்கும் கலைஞர்கள் தங்களது படைப்புகளை முழுமை செய்து ஒப்படைக்க வேண்டும்
10. முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
11. 'தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானது
12. ஓவியம் மற்றும் சுடுமண் சிற்ப முகாமில் பங்கேற்கும் அனைத்து கலைஞர்களுக்கும் சான்றிதழ் அளிக்கப்படும்.
13. ஓவியம் மற்றும் சுடுமண் சிற்ப முகாம் 17.03.2023 மற்றும் 18.03.2023 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும். நேரம் : காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.